1987 நவம்பர் 10]

இராமநாதபுரம் மாவட்டத்தை கதர் வாரியம் தத்து எடுத்தல்.

25—(*வினா எண் 14541) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தை கதர் வாரியம் தத்து எடுத்துள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அம்மாவட்டத்தை தத்து எடுத்து பல் வேறு கதர் கிராமத் தொழில்களை துவங்கிட நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை தத்து எடுத்ததாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எந்த அடிப்படையில் கதர் வாரியம் தத்து எடுத்து உள்ளது? எவ்வளவு தொகை இதற்காக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது? இதனால் அந்தப் பகுதியில் எத்தனை கிராமங்களில் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2—10—1985-ல் நடைபெற்ற கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிகளில், மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர் கள், இராமநாதபுரம் மாவட்டத்தை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்பு செய்து, கதர் கிராமத் தொழிலை அபிவிருத்தி செய்யும் என அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையில் 19 கூட்டுறவுச் சங்கங்களும், அதே போல கதர்த் துறையைச் சார்ந்த 2 அலகுகளும் அமைப்பதற்காக நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கதர் நூற்பு மற்றும் நெசவுத்

தொழில் கூட்டுறவுச் சங்கம் 4, கதர் பட்டு பெருக்கு அலகு ஒன்று, கதர் பட்டு நெசவுத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று, சுண்ணாம்பு உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று, மண் பாண்ட தொழில் கூட்டுறவுச் சங்கம் 6, தச்சுப் பொருள் தொழில் கூட்டுறவுச் சங்கம் 2, மசாலா பொருள் அலகுகள் ஒன்று, பனை ஓலைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 4, பாய் முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று என்று மேற்படி திட்டங்களுக்கு 65.13 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்பீட்டில் கதர் ஆணைக் குழு நிதி உதவியுடன், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினுடைய நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டங்களின் கீழ் 17 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதையும் தஞ்சை மாவட்டத்தை கதர் வாரியம் தத்து எடுக்க உள்ளதா என்பதையும் அறிந்து கொள்ள விரும்புவதோடு, தஞ்சை மாவட்டம் விவசாய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், அங்கே இருக்கிற தாய்மார்களுக்கு ஆண்டுக்கு 6 மாத காலத்திற்கு வேலை இல்லாது இருக்கிற நிலைமை இருப்பதால் தஞ்சை மாவட்டத்தைக் கதர் வாரியம் தத்து எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக இதுவரையில் 1,077 பேர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு திட்டத்தைக் கதர் வாரியம் மூலமாகத் தொடங்குகிறபோது வருடம் பூராவும் பணியாற்றுவதற்குப் பணியாளர்கள் கிடைப்பார்களா என்பதை யோசித்துத்தான் துவக்க முடியுமே தவிர, 6 மாத காலத்திற்கு மட்டும் பணியாளர்கள் கிடைப்பார்கள் என்று திட்டத்தைத் துவக்கினால், மீதி 6 மாத காலத்திற்கு மூடி வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே ஆங்காங்கு கிடைக்கின்ற பணியாளர்களின் எண்ணிக்கையை வைத்து தேவையை அறிந்து துவக்கப்படும்.